**செய்தி வெளியீடு எண்:1195** **நாள்:25.11.2021**

**<u>செய்தி வெளியீடு</u>**

ஒன்றிய அரசின் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகம் சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளுடன் கோவிட் கால விமானப் போக்குவரத்திற்கான ஒப்பந்தம் செய்து கொள்ளாத நிலையைக் குறிப்பிட்டு, அந்நாடுகளில் வாழும் புலம் பெயர்ந்த தமிழர்கள் தமிழ்நாட்டிற்கு வர விரும்பும் நேர்வுகளில், நேரடி விமான சேவையில்லாத காரணத்தால், துபாய், தோகா மற்றும் கொழும்பு மார்க்கமாக மாற்றுப் பாதையில் பயணம் மேற்கொள்ள வேண்டியுள்ளது என்றும், அதன் காரணமாக பல்வேறு இன்னல்களுடன் அதிக விமானக் கட்டணங்களைச் செலுத்த வேண்டியுள்ளதாகவும் சுட்டிக்காட்டி, அவர்கள் எதிர்கொள்ளும் இத்தகைய இடர்ப்பாடுகளைத் தீர்ப்பதற்கு தற்காலிக விமான சேவைகளை வழங்கிட ஏதுவாக, சிங்கப்பூர் மற்றும் மலேசியா நாடுகளுக்கு இடையில் தற்காலிக கோவிட் கால "விமானப் போக்குவரத்து ஏற்பாடுகள்" உடன்படிக்கையை செய்து கொள்ளுமாறு கோரி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு ஒன்றிய விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கு இன்று (25-11-2021) கடிதம் எழுதியுள்ளார்.

- - - - - -

**<u>Text of the D.O. Letter No. 2469/I.2/2020, Dated 25-11-2021 of Thiru M.K. Stalin, Hon'ble Chief Minister of Tamil Nadu addressed to the Hon'ble Union Civil Aviation Minister:</u>**

I wish to bring to your notice that Tamils who are having permanent residentship of Singapore and Malaysia and other travellers from our state who made their trip to India during pandemic period are facing hardship for their return journey due to non-availability of direct flight services. They have to travel through Dubai, Doha and Colombo which is causing serious inconvenience and financial burden as they have to pay more air charges and travel through long distance due to the detour.

In addition, due to the lack of agreement of temporary 'Air Transport Bubbles' between the countries of Singapore and Malaysia, the

travel business is being cornered by other foreign airlines like Qatar Airways, Emirates and Srilankan Airlines and not to our country's airlines.

Hence, I request you to make a temporary 'Air Transport Bubbles' agreement with Singapore and Malaysia at the earliest, for providing temporary airline services and resolve the difficulties faced by the Tamil diaspora in Singapore and Malaysia.

------

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**